வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November- 2017

| தரம் :- 13 (2018) | பொருளியல் I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

கவனத்துக்கு :

- எல்லா வினாக்களுக்கும் விடைதருக
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

01. தீர்மானம் எடுப்பதற்குரிய பொருளாதாரச் சிந்தனை என்பது பின்வருவனவற்றுள் எதனைக்குறிக்கும்
    1. எல்லை நலனை விட மொத்தச் செலவு குறைவாக இருக்கும் தெரிவு
    2. எல்லை நலனை விட எல்லைச் செலவு அதிகமாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்
    3. எல்லை நலனை விட எல்லைச் செலவு குறைவாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்
    4. எல்லைச் செலவும் எல்லை நலனும் சமனாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்
    5. மொத்த நலனை விட மொத்தச் செலவு உயர்வாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்

02. பின்வருவனவற்றில் நியமப் பொருளியல் கூற்றாகக் அமைவது எது
    1. கடந்த மாதம் நுகர்வோர் விலைச்சுட்டெண் 5.6% அதிகரித்துள்ளது
    2. ஜல்லிக்கட்டு நடத்துதல் ஓர் மிருகவதையாகும்
    3. கடன் மீதான சராரி வட்டி வீதம் 8.6% ஆக உள்ளது
    4. வருடாந்த வீதமாக 2.6% படி பொருளாதாரம் வளர்கின்றது
    5. அனைத்தும் சரியானவை

03. பின்வருவனவற்றில் தொழிற்படு மூலதனமாகக் கருதப்படுவது
    1) இயந்திரங்கள் 2) எரிபொருள் 3) கருவிகள் 4) கட்டிடங்கள் 5) மனித அறிவு

04. பொருளியலின் மையப் பிரச்சனை அருமை ஆகும். அருமை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது?
    1. அருமைப் பிரச்சனை அபிவிருத்தியடைந்த நாடுகளை மட்டுமே ஆட்கொள்கின்றன
    2. அபிவிருத்தியடைந்த நாடுகளில் அருமை பிரச்சனை என்ற ஒன்று இல்லை
    3. சந்தைகளில் தற்காலிகமாக ஏற்படும் பொருட் தட்டுப்பாடு அருமையாகும்
    4. அருமையில்லாத சமூகத்தில் பொருளாதாரப் பண்டம் என்ற பெயரில் எதுவும் இருக்காது.
    5. வளங்களின் பற்றாக்குறையை குறிக்கும்

05. வளங்கள் அருமையானதாகவும் ஏகபரிமானத் தன்மையற்றதாகவும் காணப்படுவதால் உற்பத்திச் சாத்திய வளையி
    1. நிலையான அமையச்செலவுடன் மூலத்துக்கு குவிவாக அமைகின்றது
    2. அதிகரித்துச் செல்லும் அமையச்செலவுடன் வெளிநோக்கி குழிவாக அமைகின்றது
    3. மேல் நோக்கி சரிவதுடன் மூலத்துக்கு குழிவாக அமைகின்றது
    4. கீழ் நோக்கி சரிவதுடன் மூலத்துக்கு குழிவாக அமைகின்றது.
    5. குறைந்து செல்லும் அமையச் செலவுடன் மூலத்துக்கு குவிவாக அமைகின்றது.

06. திட்டமிட்ட பொருளாதாரம் ஒன்றில் யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை தீர்க்கப்படுவது.

1. அரசாங்கம் பொருளாதாரத் திட்டமொன்றின் அங்கமாக வேதனங்களையும் விலைகளையும் தானே நிர்ணயித்தலூடாக
2. போட்டிச் சந்தைகளில் வருமானக்கொடுப்பனவுகளுக்கு சாதனங்களின் விற்பனையால்
3. சமூக வழக்காறுகளைக் கையான்டு சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு உற்பத்தியை பங்கீடு செய்வதனூடாக
4. குறைந்த வருமானம் உழைப்பவர்களுக்கு பொருட்களையும் சேவைகளையும் விலைகளையும் அரசாங்கம் தானே நிர்ணயிப்பதனூடாக
5. தொழில் கொள்வோருக்கும் தொழில் வழங்குனருக்குமிடையே பேரம் பேசலினூடாக நிர்ணயிக்கப்படும்

07. கட்டில்லா சந்தைப்பொருளாதாரம் ஒன்றின் விலைப்பொறிமுறையின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்று

1. நிறைதொழில் மட்டத்தை உறுதிசெய்தல்
2. அருமையான வளங்களைப் பங்கீடுசெய்தல்
3. விலையுறுதி பேனுதல்
4. பொதுப்பொருட்களை வழங்கல்
5. வருமான சமபங்கீட்டினை உறுதிசெய்தல்

08. நேர் கேள்வி நேரில் கேள்வி தொடர்பில சரியான விடையினைத்தெரிவுசெய்க?

| | **நேர்கேள்வி** | **நேரில்கேள்வி** |
|---|---|---|
| 1. | மூலப்பொருட்களுக்கான கேள்வி | நுகர்வுப்பொருட்களுக்கான கேள்வி |
| 2. | உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி | மூலப்பொருட்களுக்கான கேள்வி |
| 3. | இடைநிலைப் பண்டத்துக்கான கேள்வி | உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி |
| 4. | உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி | நுகர்வுப்பண்டங்களுக்கான கேள்வி |
| 5. | நுகர்வுப்பண்டங்களுக்கான கேள்வி | உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி |

09. சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பற் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$$Qd = 600 - 10p \qquad Qs = 10p$$

இப்பண்டத்தின் அலகு ஒன்றுக்கு அரசாங்கம் குறித்த ஓர் தொகையினை மானியமாக வழங்கிய பின்னர் சமநிலை விலை 25 ரூபாவாக மாற்றமடைந்ததெனின் அரசு வழங்கிய மானியத்தின் அளவு யாது?

1) ரூபா 5 2) ரூபா 10 3) ரூபா 15 4) ரூபா 25 5) ரூபா 30

10. $Qd = 50 - 2p$ என்னும் கேள்விச் சமன்பாட்டினைக் கருதிக்கொள்க சந்தை சமநிலை விலை எத்தனை ரூபாவாக இருக்கும்போது கேள்வி நெகிழ்ச்சி -1 ஆகக் காணப்படும்.

1) 10.5 2) 25.6 3) 8 4) 12.5 5) 15.7

11. குறிப்பிட்ட பொருள் ஒன்றின் விலை 20 ரூபாவாகக் காணப்பட்ட போது நுகர்வோன் செலவு 6000 ரூபா ஆகும். விலை கேள்வி நெகிழ்ச்சி -2 ஆகவும் காணப்பட்டது. குறிப்பிட்ட பொருளின் கேள்வித்தொகை 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது, தற்போது பொருளின் விலை மற்றும் நுகர்வோன் செலவை காட்டும் தொகுதியானது முறையே?

1) 10, 6750 2) 25, 7750 3) 25, 3750 4) 15, 8000 5) 20, 9400

12. குறிப்பிட்ட பொருளின் கேள்வித்தொகை 50 அலகுகளாகக் காணப்பட்ட போது விலை கேள்வி நெகிழ்ச்சி - 2.5 எனின் குறிப்பிட்ட பொருளின் ஆகக் கூடிய கேள்வித்தொகை யாது?

1) 125 2) 100 3) 150 4) 175 5) 130

13. கீழ்நோக்கி சரியும் நேர்கோட்டு கேள்வி வளையி ஒன்றன் சரிவு -4 ஆகும். 10 ரூபா விலையில் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை 40 அலகுகள். ரூபா 10 விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ?

1) நெகிழ்வுள்ளது 2) நெகிழ்வற்றது 3) ஒருமை


4) முழுமையாக நெகிழ்வுள்ளது 5) முற்றாக நெகிழ்வற்றது

14. ஒருமை கேள்வி நெகிழ்ச்சி மற்றும் ஒருமை நிரம்பல் நெகிழ்ச்சி என்பவற்றை காட்டும் சமன்பாட்டு சோடி யாது ?

1) Qd = 50 – 5p , Qs = 10 + 2p 2) Qd = 2p , Qs = 10 + 2p

3) Qd = 50 – 5p , Qs = 5p 4) Qd = 50 / p , Qs = 10p 5) Qd = 10p , Qs = 10p

15. பின்வரும் வரைபடத்தைக் கருதுக





சமநிலைப் புள்ளியில் கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சியின் பெறுமதியாது

| இல. | கேள்வி நெகிழ்ச்சி | நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | - 0.33 | - 0.77 |
| 2. | - 0.33 | - 0.66 |
| 3. | - 0.66 | - 0.33 |
| 4. | - 0.44 | - 0.66 |
| 5. | - 0.8 | - 0.9 |

16. நெகிழ்வற்ற கேள்வியும், நெகிழ்வுள்ள நிரம்பலும் காணப்படும் போது அரசாங்கம் அலகு வரியினை விதிப்பின்

1. வரியின் பெருமளவு சுமையினை சுகர்வோனே சுமப்பார்
2. வரியின் சுமையினை நுகர்வோன் மட்டுமே சுமப்பார்
3. வரியின் பெருமளவு பகுதியினை உற்பத்தியாளரே சுமப்பார்
4. வரிச் சுமையானது இருவருக்கும் சமனாக பங்கிடப்படும்
5. வரியினால் எவருக்கும் சுமை ஏற்படாது

17. பண்டம் ஒன்றை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் மீது அலகு வரியினை அரசு விதித்த பின்னர் ஏற்பட்ட தாக்கங்களை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது




பின்வருவனவற்றில் சரியானது எது ?

| இல. | புதிய நுகர்வோன் மிகை | புதிய உற்பத்தியாளன் மிகை | வரியின் மிகைச் சுமை |
|---|---|---|---|
| 1. | A + B + C | D + E + F + H + G | B +C |
| 2. | A | H + G | C + F |
| 3. | D + E + F + H + G | A + B + C | D + E + F |
| 4. | B + C | C + F | D + E + F |
| 5. | H + I | A | C + F |

18. அரசாங்கம் வரியினை விதிக்கும் போது வரிச் சுமையை அதிகம் உற்பத்தியாளரை விட நுகர்வோர் தாங்கும் நிலை எப்போது காணப்படும்

| இல. | விலைக் கேள்வி நெகிழ்ச்சி | விலை நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | நெகிழ்வுள்ளது | நெகிழ்வற்றது |
| 2. | நெகிழ்வற்றது | நெகிழ்வுள்ளது |
| 3. | நெகிழ்வுள்ளது | முடிவிலி |
| 4. | அலகு நெகிழ்ச்சி | பூச்சியம் |
| 5. | பூரண நெகிழ்வற்றது | நெகிழ்வுள்ளது |

19. நீண்டகால உற்பத்திச் செயற்பாடொன்றில் சராசரிச் செலவு குறைவடைவதற்கு காரணமாக அமைவது,
   1. குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி
   2. பேரளவுச் சிக்கனம்
   3. அதிகரித்துச்செல்லும் எல்லை விளைவு விதி
   4. தொழில்நுட்பச் சிக்கனமின்மை
   5. சந்தைப்படுத்தல் சிக்கனமின்மை

20. நிறைபோட்டி சந்தையில் தொழிற்படும் நிறுவனம் ஒன்றின் மொத்த வருமானம் மொத்தச் செலவு பற்றிய தரவுகள் பின்வருமாறு

| வெளியீடு | மொத்த வருமானம் | மொத்தச்செலவு |
|---|---|---|
| 0 | 0 | 20 |
| 1 | 20 | 36 |
| 2 | 40 | 52 |
| 3 | 60 | 68 |
| 4 | 80 | 80 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் குறித்தபொருளின் சந்தைவிலையினை கண்டறிக?

1) 10    2) 15    3) 20    4) 30    5) 25

21. குறுங்காலத்தில் சராசரி வருவாயானது சராசரிச் செலவைவிடக் குறைவாக இருப்பினும் நிறுவனம் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமாயின் அதன் சராசரி வருமானம்.
    1. சராசரி நிலையான செலவை விட உயர்வாக இருக்க வேண்டும்
    2. எல்லைச் செலவினை விட உயர்வாக இருக்கவேண்டும்
    3. சராசரி மாறும் செலவை விட உயர்வாக இருக்கவேண்டும்
    4. மாறும் செலவுகள் மற்றும் நிலையான செலவுகளின் கூட்டுத்தொகையைவிட உயர்வாக இருக்கவேண்டும்
    5. எல்லை வருவாயைவிட உயர்வாக இருக்க வேண்டும்

22. குறுங்கால நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக்கோடு காணப்படும் பகுதியில் எப்போதும்.
    1. சராசரி நிலையான செலவு அதிகரித்துச் செல்லும்
    2. சராசரி மாறும் செலவுக்கு மேல் வரும் எல்லைச் செலவுக் கோடு
    3. சராசரி மாறும் செலவு அதிகரித்துச் செல்லும்
    4. சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடைந்து செல்லும்
    5. சராசரி மொத்தச் செலவு வீழ்ச்சியடைந்த செல்லும்.

23. பின்வருவனவற்றுள் மாறும் செலவு என்பதனுள் உள்ளடங்குவது
    1. சாதாரன இலாபம்
    2. பெறுமானத் தேய்வு
    3. பிரதான காவலாளிக்கு வழங்கப்படும் கூலி
    4. நிலத்துக்கு வழங்கப்படும் வாடகை
    5. மேற்கூறிய எவையும் இல்லை

24. வளங்களை அவற்றின் இன்றைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் கட்டணத்துக்கு மேலதிகமாக அறவிடப்படும் கட்டணம்
    1. காரணிக் கொடுப்பணவுகள் எப்படும்
    2. மாற்றல் கட்டணம்
    3. மூலப்பொருட்களை நுகர்வதற்கு வழங்கப்படும் கட்டணம்
    4. தொழிற்சாலை மூடுவதைத் தடுக்கும் முகமாக வழங்கப்படும் வாடகைக் கட்டணம்
    5. சிக்கன வாடகை

25. பொருளாதாரம் ஒன்றின் அடிப்படை விலை மொத்த உள்நாட்டு வருமானம் 220 மில்லியன் எனவும், மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான நேரில் வரி 30 மில்லியன் எனவும், வர்த்தக நிலுவை -50 மில்லியன் எனவும் இருப்பதாகக் கருதிக்கொண்டால் மொத்த உள்நாட்டு கேள்வி எத்தனை மில்லியன் ரூபாவாகக் காணப்படும்.

1) 200 2) 300 3) 250 4) 350 5) 150

26. தேசிய வருமானம் ஒன்றினை மதிப்பிடும் போது பின்வருவனவற்றுள் எது உள்ளடக்கப்படுவதில்லை

1. சுயதொழில் வருமானங்கள்
2. பங்குலாபங்கள்
3. அரசிடம் இருந்தான வட்டி வருவாய்
4. பகிரப்படாத இலாபங்கள்
5. கம்பனி இலாபம் மீதான வரிகள்

27. பின்வருவனவற்றில் தவறான கூற்றினை இனங்காண்க

1. எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி ஒன்றைவிடப் பெரிதாக காணப்படமாட்டாது
2. வருமானத்தை விட நுகர்வு அதிகமாயின் சராசரி நுகர்வு நாட்டத்தின் பெறுமதி ஒன்றைவிடக் குறைவாகும்
3. சமநிலை வரவுசெலவுத்திட்டப் பெருக்கியின் பெறுமதி எப்போதும் ஒன்றாகக் காணப்படும்
4. சராசரி நுகர்வு நாட்டம், சராசரி சேமிப்பு நாட்டம் என்பவற்றின் பெறுமதி ஒன்றுக்கு சமனாகக் காணப்படும்
5. ஒன்றில் இருந்து எல்லை சேமிப்பு நாட்டத்தினைக் கழிப்பதன் மூலம் எல்லை நுகர்வு நாட்டத்தினைக் கணிப்பிடமுடியும்.

28. அரச துறை செயற்படும் மூடிய பொருளாதாரம் ஒன்றில் எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) 0.2 ஆகும், வரியில் ஏற்பட்ட வீழ்ச்சி நுகர்வுச் செலவினை 320 மில்லிய ரூபாவால் அதிகரிப்பின் வரி எவ்வளவால் வீழ்ச்சியடைந்திருக்கவேண்டும்.

1) 75 மில்லியன் ரூபா 2) 100 மில்லியன் ரூபா 3) 250 மில்லியன் ரூபா
4) 750 மில்லியன்ன ரூபா 5) 150 மில்லியன் ரூபா

29. வருமானம் ரூபா 6000 ஆக உள்ளபோது சராசரி சேமிப்பு நாட்டம் 0.2 எனவும் எல்லை சேமிப்பு நாட்டம் 0.25 ஆகவும் இருப்பின் தன்னிச்சையான நுகர்வு யாது?

1) 200 2) 300 3) 1000 4) 75 5) 150


30. கற்பனையான பொருளாதாரம் ஒன்றின் அரச செலவுப் பெருக்கி 4 எனவும் அரசாங்கம் 100 மில்லியன் ரூபா வரியினை அறவிடும் அதேவேளை 150 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதாகவும் கருதிக்கொள்க. அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கையால் சமநிலை வருமானத்தில் ஏற்படும் தேறிய அதிகரிப்பு யாது?

1) 200 2) 600 3) 300 4) -300 5) 500

31. கற்பனையான பொருளாதாரம் ஒன்றின் வரிப்பெருக்கி -7 எனக் கருதிக்கொள்க இந்நிலையில் இப்பொருளாதாரத்தின் அரசசெலவுப்பெருக்கி யாது?

1) 6 2) 5 3) 8 4) 4 5) 3

32. பேரினப்பொருளாதாரம் தொடர்பான எளிய பொருளாதாரச் சமநிலையை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




மேற்படி வரைபடத்தின் படி முதலீடு மேலும் 100 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலை வருமான மட்டம் யாது?

1) 3200 2) 3500 3) 3800 4) 4000 5) 3100

33. பின்வருவனவற்றுள் எது செலவு தூண்டல் பணவீக்கத்துக்கு காரணமாக அமையாதது?

1. பெற்றோலிய விலையில் ஏற்படும் துரித அதிகரிப்பு
2. வெளிநாட்டு நாணயத்துக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி குறைவடைதல்
3. அரச ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரித்தல்
4. அரசாங்கம் நாணயப் பெறுமதி இறக்கத்தினை மேற்கொள்ளுதல்
5. மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தல்

The National e-Learning Portal for The General Education

34. பணவீக்கம் இன்மை என்பது.

1. பொதுவிலைமட்டத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியாகும்
2. எதிர்க்கணிய பணவீக்கம் ஆகும்
3. அத்தியாவசியப் பொருட்களின் விலையில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியாகும்
4. பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியாகும்
5. நாணய அலகொன்றின் பெறுமதி மற்றுமொரு நாணய அலகொன்றிற்கு சார்பாக வீழ்ச்சியடையச் செய்வதாகும்.

35. குறித்த பொருட்கூடையில் X, Y மற்றும் Z ஆகிய 3 பண்டங்கள் உள்ளடங்கியிருப்பதாகவும் அவற்றின் விலைகள் முறையே அடியாண்டில் 10,20,10 எனவும் நடைமுறை ஆண்டில் இவ்விலைகள் முறையே 12, 25, 10 என இருப்பதாகவும் இப்பொருட்களுக்கான நிறைகள் முறையே 50,20,30 என இருப்பதாகவும் கருதிக்கொள்க இந்நிலையில் நாட்டின் நடைமுறை ஆண்டுக்கான விலைச்சுட்டெண் யாது?

1) 116.7 2) 115.8 3) 118.7 4) 200.6 5) 150.5

36. தேசிய உற்பத்தியின் பெயரளவு பெறுமதி மற்றும் பொதுவிலைமட்டம் ஆகிய இரண்டும் நிலையாகவுள்ளபோது பணநிரம்பல் அதிகரிக்குமாயின் பின்வருவனவற்றுள் எது நிகழக்கூடும்.
   1) பணவீக்கம்
   2) பணச்சுருக்கம்
   3) வேலையின்மை குறைவடைதல்
   4) வேலையின்மை அதிகரித்தல்
   5) பணத்தின் சுழற்ச்சி வேகம் வீழ்ச்சியடைதல்

37. பணக் கேள்வி அதிகரிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகளுள் பொருத்தமற்றது
   1. மெய் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு
   2. வருமானம் பெறும் கால இடைவெளியில் ஏற்படும் அதிகரிப்பு
   3. பொது விலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு
   4. வட்டி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி
   5. கடனட்டை மற்றும் வரவட்டை பாவனையில் ஏற்படும் வீழ்ச்சி

38. நிதிமுழுமை அமைப்பில் உள்ளடங்காதது எது?
   1. பொதுமக்கள் கையில் உள்ள சட்டப்பணம்
   2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் உள்ள சேமிப்பு தவணை வைப்புக்கள்
   3. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் கையில் உள்ள காசு
   4. அதிகாரம் பெற்ற சிறப்பு வங்கிகள், நிதிக்கம்பனியில் உள்ள பொதுமக்களின் பெயரிலான வைப்புக்கள்
   5. வதிவுள்ளோர், வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள்

39. பணக்கேள்வி வளையி கீழ்நோக்கி சரிவடையக் காரணம்
   1. கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்காக பணத்துக்கு கேள்வி ஏற்படுவதனால் ஆகும்
   2. பாதுகாப்பு நோக்கத்துக்காக பணத்துக்கு கேள்வி ஏற்படுவதனால் ஆகும்
   3. உத்தேச நோக்கத்துக்காக பணத்துக்கு கேள்வி ஏற்படுவதனால் ஆகும்
   4. பணக்கேள்வி சராசரி விலை மட்டத்தின் நேர்க்கணிய சார்பாக அமைவதால் ஆகும்
   5. பணக்கேள்வி புழக்கச் சுற்றோட்ட வேகத்துடன் எதிர்கணிய தொடர்பினைக் கொண்டிருப்பதால் ஆகும்.

40. பின்வருவனவற்றுள் பணநிரம்பலின் சுருங்களுக்கு வழிவகுப்பது எது?
   1. நாணய மாற்று வீதத்தின் பெறுமதித் தேய்வு
   2. தனிநபர் வருமான வரியில் ஓர் அதிகரிப்பு
   3. மத்திய வங்கி கொடுகடன்களை அதிகரிக்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு ஊக்கம் அளித்தல்
   4. மத்திய வங்கி அரச ஆவணங்களை விற்பனை செய்தல்
   5. மத்திய வங்கி அரச ஆவணங்களை கொள்வனவு செய்தல்

41. ஓர் நாட்டின் வருடாந்த கொடுக்கல் வாங்கல் அளவு 10 மில்லியனாகவும், சராசரி விலை மட்டம் 50 ரூபாவாகவும், வருடாந்த பண சுழற்ச்சி வேகம் 5 ஆகவும் இருப்பின் நாட்டின் பணநிரம்பலின் அளவு யாது?
   1) 150   2) 200   3) 125   4) 100   5) 300

42. இலங்கையின் பணக்கூட்டுக்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்பட்டுள்ளது.

| விடயம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| அடிப்படைப் பணம் | 150 |
| வணிகவங்கிகளிடம் உள்ள புழக்கப் பணம் | 40 |
| மத்திய வங்கியில் உள்ள வணிக வங்கிகளின் வைப்புகள் | 15 |
| வணிக வங்கிகளில் உள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள் | 60 |
| வணிக வங்கிகளில் உள்ள பொதுமக்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 200 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் பொருளாதாரத்தின் குறுகிய பணநிரம்பல் ($M_1$) மற்றும் விரிந்த பணநிரம்பல் ( $M_2$ ) என்பன முறையே

1) M1 = 110 M2 = 310
2) M1 = 155 M2 = 355
3) M1 = 95 M2 = 295
4) M1 = 235 M2 = 435
5) M1 = 85 M2 = 285

43. வங்கி முறைமையின் மொத்தக் கேள்வி வைப்பு ரூபா 1000 மில்லியன் ஆகவும் மொத்த ஒதுக்கு 200 மில்லியனாகவும் வங்கிமுறைமையின் எஞ்சிய சொத்துக்கள் கடன்களாகவும் உள்ளதாகவும். பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவு ரூபா 1000 மில்லியன் எனவும் கொள்க. தேவைப்படும் ஒதுக்கு 10 வீதமாக காணப்படுமாயின் கடனாக்கச் செயன்முறை பூர்த்தியடையும் போது இப் பொருளாதாரத்தில் நிலவக் கூடிய பண நிரம்பலின் அளவு

1) 2000
2) 1500
3) 3000
4) 1500
5) 2500

44. வங்கி முறைமையின் கீழ் இயங்கும் வனிக வங்கிகள் 25 வீத காசு ஒதுக்கு வீதத்தின் கீழ் செயற்படுவதாக கருதிக்கொள்க இந்நிலையில் நாட்டின் பண நிரம்பல் 300 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்க வேண்டுமாயின் வங்கியில் எத்தனை மில்லியன் ரூபா வைப்பில் இடப்பட வேண்டும்.

1) 60
2) 75
3) 100
4) 25
5) 150

45. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வரைவிலக்கணம் தொடர்பாக மிகச் சரியான வரைவிலக்கணம்.

1. பொதுமக்களிடம் இருந்து கேள்வி வைப்புக்களை மட்டும் திரட்ட மத்தியவங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்
2. பொதுமக்கள் கேட்டவுடன் பணத்தை வழங்கக்கூடிய நடைமுறை வைப்புக்கள், சேமிப்பு, தவணை வைப்புக்களைத் திரட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்
3. குறுங்கால, நீண்டகால கடன்களை வழங்க மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்
4. மத்திய வங்கியினால் நாணையச் சட்டம், வங்கிச் சட்டங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனம்
5. நாட்டின் பணச்சுற்றோட்டத்துடனும் நிதிக்கொடுக்கல் வாங்களுடனும் தொடர்புபட்ட நிதிநிறுவனம்

46. இலங்கை மத்திய வங்கியானது வணிக வங்கிகளுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்களைச் செய்யும்போது

1. அழைப்புக் கடன்சந்தையில் வட்டிவீதங்கள் மேல்நோக்கி அசையும்
2. அழைப்புக் கடன்சந்தையில் வட்டி வீதங்கள் கீழ் நோக்கி அசையும்
3. பணநிரம்பல் சுருக்கமடையும்
4. வணிக வங்கிகள் மத்தியவங்கியில் வைத்துள்ள வைப்புக்கள் குறைவடையும்
5. அழைப்புக் கடன் சந்தையில் வட்டிவீதங்களில் பாதிப்பு ஏற்படாது.

47. சந்தைத் தோல்விக்கான காரணமாக அமையாதது

1. காரணி அசைவின்மை
2. பொருளாதார அதிகாரம் மையமடைதல்
3. பொது ஆதன வளங்கள் காணப்படுதல்
4. பொதுப்பண்டங்கள் காணப்படுதல்
5. விலைமுறைமை காணப்படுதல்.

48. சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசு தலையிடுவதற்குரிய காரணமாக அமைவது

1. சைகை வழங்கும் கருமம் ஆற்றுதல்
2. ஊக்குவிக்கும் பணியாற்றுதல்
3. பங்கீடு செய்யும் கருமம் ஆற்றுதல்
4. விலை உறுதிபேணும் கருமம் ஆற்றுதல்
5. விலைப்பொறிமுறையினை நெறிப்படுத்துதல்

49. ஒரு பண்டத்தின் உற்பத்தியினால் தனிப்பட்ட நன்மையை விட சமூக நன்மை குறைவாக இருப்பின் அரசாங்கம்

1. அப்பண்டத்தின் உற்பத்திக்கு மானியம் வழங்க வேண்டும்
2. அப்பண்டத்தின் மீது அலகு வரி விதித்தல் வேண்டும்
3. அப்பண்டத்தின் மீது பெறுமான வீத வரி விதித்தல் வேண்டும்
4. அப்பண்டத்தின் உற்பத்தி மீது உச்ச விலைக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்
5. சட்டரீதியாக தடைசெய்ய வேண்டும்

50. சந்தை முறைமையினால் வழங்கக் கூடிய பண்டமாயினும் நேர்க்கணிய வெளிவாரி விளைவைக் கொண்டிருப்பதால் பெரும்பாலும் அரசினால் வழங்கப்படுவது

1. மருத்துவம்
2. பொதுப்பண்டங்கள்
3. கௌரவப்பண்டங்கள்
4. இழிவுப்பண்டங்கள்
5. அத்தியாவசியப்பண்டங்கள்

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November- 2017

| தரம் :- 13 (2018) | பொருளியல் II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

கவனத்திற் கொள்க :

❖ ஒரு பகுதியில் இருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக?

## பகுதி I

01.

1. பொருளியல் ரீதியாக சிந்தித்தல் என்ற பதத்தினை விளக்குக? (4 புள்ளிகள்)
2. "நிகழ்கால நுகர்வினை தியாகம் செய்வதற்கும் மூலதன இருப்புக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக ? (4 புள்ளிகள்)
3. மெய்மூலதனம், சுழலும்மூலதனம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் யாவை? (3 புள்ளிகள்)
4. பின்வருவன நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சி ஆகிய உற்பத்திக்காரணிகளுள் எந்த வகை எனக் கண்டறிக?
   அ) மீன்கள்
   ஆ) சட்ட ஆலோசனை
   இ) வாடகைக் கார்
   ஈ) கணனி மென்பொருள்
   உ) வன விலங்குகள்
   ஊ) தங்கம்
   எ) வீதிகள்
   ஏ) குளிர்
   ஐ) எரிபொருள்
   ஒ) காரீயப் படிவம் (5 புள்ளிகள்)
5. பொருளாதாரவளம் பொருளாதாரமல்லாவளம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு கள் 4 தருக? (4 புள்ளிகள்)

02.

1. சர்வேதச வர்த்தகத்தில் ஈடுபடும்போது ஓர் நாடு தனது இயலுமைக்கு மேலாக நுகர்வினை மேற்கொள்ள முடியும் என்பதனை உற்பத்திசாத்திய வளை கோட்டின் உதவியுடன் விளக்குக? (4 புள்ளிகள்)

2. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் குறித்துக்காட்டுக?

அ) வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு

ஆ) எரிபொருள் விலையில் ஏற்படும் அதிகரிப்பு

இ) மனிதமூலதன அபிவிருத்தி இடம்பெறுதல்

ஈ) தொழிலாளர்களும் தொழிற்சாலைகளும் மேலதிக நேரம் வேலை செய்தல்

உ) வேலை நிறுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படுதல் (5 புள்ளிகள்)

3. உற்பத்திச்சாத்திய வளைகோடு எதிர்கணிய சரிவினை கொண்டிருப்பதற்கான காரணங்கள் எவை ? (2 புள்ளிகள்)

4. பயறு, உழுந்து ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்யும் நாடு ஒன்றின் உற்பத்திச் சேர்க்கை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| **ஒரு அலகு பயறு உற்பத்திக்கான அமையச்செலவு** | **பயறு உற்பத்தி (அலகு)** |
|---|---|
| - | 0 |
| 1 அலகு உழுந்து | 10 |
| 2 அலகு உழுந்து | 20 |
| 3 அலகு உழுந்த | 30 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

அ) நிலைக்குத்தச்சில் உழுந்து உற்பத்தியும், கிடையச்சில் பயறு உற்பத்தியும் அமையும் வகையில் உற்பத்திச் சாத்திய வளையியை வரைக? (4 புள்ளிகள்)

ஆ) 20 அலகு பயறினை உற்பத்தி செய்யும் போது 50 அலகு உழுந்தை உற்பத்தி செய்ய நாடு தீர்மானிக்குமாயின் நாடு எதிர்கொள்ளும் பிரச்சனை யாது? விளக்குக? (2 புள்ளிகள்)

இ) பொருளாதார வளர்ச்சியினை அதிகரிப்பதன் ஊடாக மேற்படி பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவருவது சாத்தியமா ? விளக்குக? (3 புள்ளிகள்)

03.

1. வரியின் மிகைச் சுமை என்ற பதத்தினை விளக்கி வரைபடத்தில் அதனை குறித்துக்காட்டுக ? (4 புள்ளிகள்)

2. குறிப்பிட்ட பொருள் ஒன்றின் மீது அரசாங்கம் வரியினை விதிக்கும்போது வரிச் சுமை முழுவதையும் உற்பத்தியாளன் தாங்கிக்கொள்ளும் இரு சந்தர்ப்பங்களையும் வரைபடத்தின் உதவியுடன் விளக்குக? (5 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

3. போட்டிச் சந்தையொன்றில் பொருள் ஒன்றுக்கு நிலவிய கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு.

$$Qd = 500 - 20p$$

$$Qs = 200 + 10p$$

மேற்படி சமன்பாடுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

அ) சந்தை சமநிலை விலை, தொகை யாது?

ஆ) சமநிலையில் நுகர்வோன் உற்பத்தியாளன் மிகை யாது?

இ) பொருளாதார மிகை யாது?

அரசாங்கம் இப்பொருளுக்கு ரூபா 6 இனை அலகு வரியாக விதிப்பதாகக் கருதிக்கொள்க. இந்நிலையில்

ஈ) ஒரு அலகுக்கு நுகர்வோன் உற்பத்தியாளன் தாங்கும் வரிச்சுமை யாது?

உ) நுகர்வோன் உற்பத்தியாளன் தாங்கும் மொத்த வரிச்சுமை யாது?

ஊ) வரியின் மிகைச் சுமை யாது? (6 புள்ளிகள்)

4. ஊழியத்துக்கான கேள்வி மாறாத நிலையில் ஊழிய நிரம்பல் நெகிழ்ச்சியில் ஏற்படும் மாற்றம் காரணி உடைமையாளர் பெறும் சிக்கன வாடகை மற்றும் மாற்றல் கட்டணத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக? (5 புள்ளிகள்)

04.

1. உற்பத்தி தொழிற்பாடு என்பதனால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

2. பின்வரும் நடவடிக்கைகளில் எவை குறுங்காலத்துடனும், எவை நீண்டகாலத்துடனும் தொடர்புபட்டவை என கண்டறிக.

அ) உருக்கு உற்பத்தி நிறுவனம் மேலதிகமாக 100 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல்

ஆ) அலுமினிய தொழிற்சாலை புதிய இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்தல்

இ) பேரளவு உற்பத்திச் சிக்கனம்

ஈ) ராஜ தனது நிறுவனத்துக்கு மேலதிகமாக புதிய கட்டிடம் ஒன்றினை கட்டுகிறார்

உ) அதிகரித்துச் செல்லும் எல்லை விளைவு விதி (5 புள்ளிகள்)

3. சராசரி மொத்தச் செலவுக்கும் எல்லைச் செலவுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக? (4 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

4. பின்வரும் செலவுகள் நிலையான செலவு மற்றும் மாறும் செலவு ஆகியவற்றில் எவ்வகையை சார்ந்தவை எனக்குறிப்பிடுக?

அ) பெறுமானத்தேய்வு

ஆ) சாதாரண இலாபம்

இ) பிரதான நிர்வாகிகள் சம்பளம்

ஈ) குத்தகைக்கு பெறப்பட்ட இயந்திரத்துக்கான வாடகை

உ) தொழிலாளர்களுக்கான சம்பளம்

ஊ) விற்பனை வரி

எ) எரிபொருள் செலவு

ஏ) காப்புறுதிக்கட்டணம்

ஐ) போக்குவரத்துச் செலவு

ஒ) உரிமப் பத்திரக் கட்டணம் (10 புள்ளிகள்)

05.

1. சந்தைக்கட்டமைப்பினை வரையறுக்கும் அம்சங்கள் எவை? (4 புள்ளிகள்)

2. நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக் கோடு முடிவிலி நெகிழ்ச்சி கொண்டதாக இருப்பதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

3. ஏன் குறுங்காலத்தில் சராசரி மாறும் செலவுக் கோட்டுக்கு மேலுள்ள எல்லைச் செலவுக்கோட்டின் எந்தவொரு புள்ளியும் இலாப உச்சப்படுத்தல் புள்ளி எனப்படுகின்றன? (5 புள்ளிகள்)

4. பொருள் பேதப்படுத்தல் என்ற பதத்தினை விளக்கி எந்த அடிப்படையில் அதனை மேற்கொள்ள முடியும் எனக்குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

5. மாற்றல் கட்டணம் பொருளியலில் ஓர் செலவாகக் கருதப்படுவது ஏன்? (4 புள்ளிகள்)

## பகுதி II

06.

1. பொருளாதாரம் ஒன்றின் அடிப்படை விலை மொத்த கூட்டியபெறுமதியுடன் எத்தகைய சீராக்கங்களை மேற்கொள்வதன் மூலம் பின்வரும் பெறுமானங்களை கணிப்பிட முடியும்.

அ) சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஆ) மொத்த தேசிய உற்பத்தி

இ) தேசிய வருமானம்

ஈ) மொத்த உள்நாட்டு சேமிப்ப

உ) மொத்த உள்நாட்டுச் செலவு (5 புள்ளிகள்)

2. அரசிடமிருந்து பெறப்படும் வட்டி வருமானங்கள் தனிநபர் வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுகின்ற போதிலும் தேசிய வருமானக் கணக்கீட்டில் ஏன் உள்ளடக்கப்படுவதில்லை என்பதை காரணம் தந்து விளக்குக? (4 புள்ளிகள்)

3. தேசிய வருமானக் கணக்கீட்டின் முக்கியத்துவம் யாது? (3 புள்ளிகள்)

4. பேரினப்பொருளாதாரம் தொடர்பான இலங்கையின் 2016 ஆம் ஆண்டுக்கான கருதுகோள் ரீதியான பின்வரும் தரவுகளைக் கருத்திற்கொள்க.

| விடயம் | பெறுமதி (ரூபா.மில்.) |
|---|---|
| ஊழியர் இழப்பீடு | 30 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 20 |
| கலப்பு வருமானம் | 10 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 60 |
| மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான ஏனைய வரிகள் | 20 |
| பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி | 50 |
| பொருட்கள் சேவைகள் இறக்குமதி | 60 |
| மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான வரிகள் | 25 |
| வெளிநாட்டு தேறிய முதல்நிலை வருமானம் | -10 |
| வெளிநாட்டு தேறிய இரண்டாம் நிலை வருமானம் | 5 |

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை கணிப்பிடுக?

அ) மொத்த உள்நாட்டு கேள்வி

ஆ) மொத்த வெளிநாட்டு கேள்வி

இ) மொத்தக் கேள்வி

ஈ) மொத்த தேசிய செலவு

உ) செலவிடக்கூடிய மொத்த தேசிய வருமானம்

ஊ) தேசிய வருமானம்

(6 புள்ளிகள்)


5. மொத்தக் கேள்வியின் கூறுகள் யாவை ? (2 புள்ளிகள்)

07.

1. பேரினப் பொருளாதார சமநிலையின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய இரு நிபந்தனைகளும் எவை ?

(2 புள்ளிகள்)

2. பேரினப்பொருளாதாரச் சமநிலையினைக் காட்டும் பின்வரும் வரைபடத்தினைக் கருத்தில் கொள்க.




மேலுள்ள எளிய பொருளாதாரத்தின் எல்லை சேமிப்பு நாட்டம் 0.2 ஆகும். மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றை கணிப்பிடுக?

அ) தன்னிச்சையான நுகர்வின் பெறுமதி யாது?

ஆ) தன்னிச்சையான செலவின் பெறுமதி யாது?

இ) புள்ளி F ல் சமநிலை வருமான மட்டம் யாது?

ஈ) பெருக்கியின் பெறுமதி யாது?

உ) b என்ற புள்ளியால் காட்டப்பட்டுள்ள பகுதியின் பெறுமதி யாது?

ஊ) 1000 என்ற சமநிலை வருமான மட்டத்தினை அடைவதற்கு முதலீடு எத்தனை மில்லியன் ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.

(6 புள்ளிகள்)

3. பேரினப்பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்களை கருத்திற்கொள்க?

$C = 100 + 0.8\, Yd$

$I = 100$

$G = 80$

$T = 30$

$R = 20$

மேற்படி தரவுகளின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

அ) சமநிலை வருமான மட்டம் யாது?

ஆ) உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் சமன்பாடுகளை அமைக்குக?

இ) எந்த வருமான மட்டத்தில் வெளிப்பாய்ச்சல் பூச்சியமாக அமையும் ?

ஈ) சமநிலையில் வெளிப்பாய்ச்சலின் பெறுமதி யாது?

ஈ) சமநிலையில் வெளிப்பாய்ச்சல் உட்பாச்சலுக்கு சமன் என நிறுவுக?

உ) உட்பாச்சல் வெளிப்பாய்ச்சல் கோடுகளை வரைந்து சமநிலையை குறித்துக்காட்டுக?

(12 புள்ளிகள்)

08.

1. நாடுகள் பொதுவிலை மட்டத்தினை அளவிடுவதன் அவசியம் யாது? (4 புள்ளிகள்)
2. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணுக்கும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் னுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை ? (4 புள்ளிகள்)
3. நிரம்பல்பக்க பணவீக்கம் ஏன் செலவு தூண்டல் பணவீக்கம் என்று அழைக்கப் படுகின்றது? (4 புள்ளிகள்)
4. பணவீக்கத்தால் அதிகம் பாதிக்கப்படும் முக்கியமான மூன்று குழுக்களும் எவை? (3 புள்ளிகள்)
5. பணவீக்கத்தின் பாதகமான விளைவுகள் யாவை ? (5 புள்ளிகள்)

09.

1. திரவத்தன்மை, திரவத்தேர்வு முன்னுரிமை மற்றும் திரவப்பொறிநிலை என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)
2. பணத்துக்கான கேள்விக்கோடு இடப்புறம் நகர்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)
3. கற்பனையான பொருளாதாரம் ஒன்றின் மொத்தக் கேள்வி வைப்பு ரூபா 2000 மில்லியன், தேவைப்படும் ஒதுக்கு 10 வீதம் ஆகும். பொதுமக்கள் வசமுள்ள தாள், உலோக நாணயம் ரூபா 400 மில்லியன் ஆகும். மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை கண்டறிக?
   - அ) ஒதுக்குப் பணம் யாது
   - ஆ) பணப்பெருக்கியின் பெறுமதி யாது?
   - இ) நாட்டின் பணநிரம்பல் 400 மில்லியனால் அதிகரிக்க வேண்டுமாயின் மத்தியவங்கி எத்தனை மில்லியன் ரூபா பெறுமதியான ஆவணங்களை கொள்வனவு செய்யவேண்டும்? (3 புள்ளிகள்)
4. வங்கி முறைமையின் கீழ் செயற்படும் தனியுரிமை வணிக வங்கி ஒன்றினைக் கருதிக்கொள்க இந்த வங்கியில் வங்கி வாடிக்கையாளர் ஒருவர் 1000 ரூபா வைப்பில் இடுவதாகவும், தேவைப்படும் ஒதுக்கு வீதம் 20 வீதம் எனவும் கருதிக் கொள்வோம். இந்த வைப்பின் விளைவாக?
   - அ) குறித்த வங்கியிடம் உள்ள மொத்த ஒதுக்கின் அளவு யாது? புள்ளி 02
   - ஆ) குறித்த வங்கியினால் வழங்கக் கூடிய ஆகக் கூடிய கடனின் உச்ச அளவு யாது? (2 புள்ளிகள்)
   - இ) குறித்த வங்கியின் ஐந்தொகையை காட்டுக ? (2 புள்ளிகள்)
   - ஈ) கடனாக்கத்தின் வரையறைகள் எவை? (4 புள்ளிகள்)

10.

1. சந்தை தோல்வி என்றால் என்ன? சந்தைத் தோல்விக்கான அடிப்படையான 3 காரணங்களும் எவை ? (4 புள்ளிகள்)
2. தனியார் பொருள் பொதுப்பொருள் என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமை யாது? (6 புள்ளிகள்)
3. சந்தைப்பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பணிகள் யாவை? (6 புள்ளிகள்)
4. வள ஒதுக்கீட்டில் செயற்திறனை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் பணிகள் எவை? (4 புள்ளிகள்)

The National eLearning Portal for The General Education